

# 21-05-2024 செய்தி

## விண்வெளிக்கு சுற்றுலா சென்ற முதல் இந்தியர்

- விண்வெளிக்கு சுற்றுலா சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை, ஆந்திராவின் கோபிசந்த் தோட்டகுரா, 30, பெற்று உள்ளார்.
- அமேசான் நிறுவனர் ஜெப் பெஸோசின், 'ப்ளு ஆர்ஜின்' நிறுவனம், மனிதர்களை விண்வெளிக்கு சுற்றுலா அழைத்து செல்லும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.
- அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து நியூஷெப் பார்ட் என்ற விண்கலன் வாயிலாக, ஆறு பேர் குழுவினர், விண்வெளி சுற்றுலா சென்று வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினர்.
- 1984-ம் ஆண்டு இந்தியாவின் ராணுவ விங் கமாண்டராக இருந்த ராகேஷ் சர்மா முதல்முறையாக விண்வெளிக்குச் சென்றார்.
- அவருக்கு அடுத்தபடியாக, விண்வெளி பயணம் மேற்கொண்ட இரண்டாவது இந்தியர் என்ற பெருமையை கோபிசந்த் பெற்றார்.

## சாபஹார் துறைமுகம்

**என்ன ஒப்பந்தம்?**

- 21 ஆண்டுகளுக்கு முன்பு, 2003ல் இந்தய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் ஈரான் அதிபர் கடாமி இருவரும், இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான ஒரு திட்டத்தை முன்மொழிந்தனர்.
- சாபஹார் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான திட்டமும், அதில் இடம் பெற்றிருந்தது.
- கடந்த 2016ம் ஆண்டு தான் இந்தியா, ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய மூன்று நாடுகளும், சாபஹார் துறைமுகம் வழியாக, வழித்தடம் அமைக்க ஒப்பந்தம் மேற்கொண்டன.
- இத்துறைமுகத்தில் உள்ள இரண்டு முனையங்களில் ஒன்றான, ஷாஹித் பெஹெஷ்டி முனையத்தில், கன்டெய்னர்கள் மற்றும் சரக்குகளை கையாள, இந்தியா குறுகிய கால ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது.
- முதன்முறையாக இந்தியா வெளி நாட்டு துறைமுகம் ஒன்றை முழுதுமாக கையாள உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**சாபஹாரின் முக்கியத்துவம்**

- சாபஹார் துறைமுகம், ஈரானின் சிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் அமைந்துள்ளது,
- ஈரானின் துறைமுகங்களிலேயே மிகப் பெரியதும், அங்குள்ள துறைமுகங்களில் இந்திய பெருங்கடல் பகுதிக்கு நேரடி அணுகலை கொண்டதும் இந்த சாபஹார் துறைமுகம் மட்டுமே.
- மேலும், குஜராத் மற்றும் மும்பை கடற்பகுதிகளிலிருந்து நெருக்கமானதாகவும் இத்துறைமுகம் உள்ளது.
- இன்னும் எளிதாக சொல்வதென்றால், குஜராத்தின் காண்ட்லா துறைமுகத்திற்கும் சாபஹார் துறைமுகத்திற்கும் இடையேயான தூரம், புதுடில்லி-மும்பை இடையேயான தூரத்தை விட குறைவானது.
- இத்துறைமுகத்துக்கு 178கி.மீ., கிழக்கே, பாகிஸ்தானின் குவாதர் துறைமுகம் அமைந்துள்ளது.
- இந்த துறைமுகத்தை சீனா, 40 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்துள்ளது.
- சாபஹார் துறைமுகத்துக்கான இந்தியாவின் ஒப்பந்தம், சீனாவின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், இந்திய பெருங்கடல் பகுதியில் நம் நாட்டின் ஆதிக்கத்தை வலுப்படுத்தவும் உதவும்.
- மேலும், பாகிஸ்தானின் ஒத்துழைப்பை எதிர்பார்க்காமல், அண்டை நாடான ஆப்கானிஸ்தானுக்கு பேரிடர் காலங்களில் நிவாரண பொருட்கள் வழங்கவும்; வர்த்தகத்தை மேற்கொள்ளவும் சாபஹார் உதவும்
- அதுமட்டுமல்லாமல், மத்திய ஆசிய நாடுகள், ஐரோப்பா மற்றும் ரஷ்ய சந்தைகளை இந்தியா அணுகுவதை எளிமையாக்கும்.

## ஹெலிகாப்டர் விபத்தில் ஈரான் அதிபர் உயிரிழப்பு

- ஈரான், அசர்பைஜான் இடையே ஓடும் அராஸ் நதியின் குறுக்கே இரு நாடுகளும் இணைந்து பிரம்மாண்ட அணை கட்டி உள்ளன.
- அசர்பைஜானின் கோமர்லு நகரில் நடைபெற்ற திறப்பு விழாவில், ஈரான் அதிபர் சையது இப்ராஹிம் ரெய்சி, அசர்பைஜான் அதிபர் இல்ஹாம் அலியேல் உள்ளிட்டோர் பங்கேற்று திறந்துவைத்தனர்.

**இடைக்கால அதிபர் நியமனம்**

- இடைக்கால அதிபராக துணை அதிபர் முகமது மொக்பர் நியமிக்கப்பட்டார்.
- ஈரான் விதிகளின்படி, அடுத்த 50 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு, புதிய அதிபர் தேர்தல் அதிபராக மொக்பர் பதவி வகிப்பார்.

**5,000 பேருக்கு மரண தண்டனை**

- 1980 முதல் 1985 வரை நடந்த ஈரான்-இராக் போரின்போது ஈரானை சேர்ந்த இடதுசாரி குழுவான முஜாகிதீன் இ-கல்க் என்ற அமைப்பு ஈரான் ராணுவத்துக்கு எதிராக போரிட்டது.
- அவர்களுக்கு அப்போதைய இராக் அதிபர் போரின் முடிவில், முஜாகிதீன் இ-கல்க் அமைப்பை சேர்ந்த 5,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டதும்.
- அதிகாரியாக பதவி வகித்த சையது இப்ராஹிம் ரய்சி தலைமையிலான ஆணையம், அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனையை நிறைவேற்றியது.
- நிதித் துறையில் பல்வேறு பொறுப்புகளுள் வகித்த ரய்சி 2019-ல் அந்நாட்டு உச்ச நிதிமன்ற தலைமை நீதிபதியாக பதவியேற்றார். 2021ல் அதிபர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- ஈரானில் ஹிஜாப் அணியாத பெண்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ரெய்சி உத்தரவிட்டார்.